DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | | |
|---|---|---|
| Miscellaneous | : | **DVC.No.5/2025** |
| Deposition of witness for | : | **எ.ம.சா. 2** |

| | | |
|---|---|---|
| Name | : | பால்குமார் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day June of 2026

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:-**

நான் 1ம் மனுதாரருக்கும்/எதிர்மனுதாரருக்கும் ரத்த வழியில் உறவினர் இல்லை என்றால் சரிதான். எனக்கு எதிர்மனுதாரர் எவ்வாறு பழக்கம் என்றால் எனக்கு எதிர்மனுதாரர் தொழில் ரீதியில் நண்பர் ஆவார். மனுதாரர் என்ன மனு தாக்கல் செய்துள்ளார் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் 1ம் மனுதாரருக்கும்/ எதிர்மனுதாரருக்கும் இடையில் திருமணம் உறவில் சண்டை இருப்பதாகவும், எனக்கு என்ன சங்கதிகள் தெரியுமோ அதை கூறும்படி எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டார் அதனடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். எவ்வாறு எனக்கும், எதிர்மனுதாரருக்கும் தொழில் ரீதியாக பழக்கம் ஏற்பட்டது என்றால் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் அலுவலகத்தில் குமஸ்தாகவாக பணிபுரிவதால் எனக்கு எழும் சட்ட ரீதியான சந்தேகங்களுக்கு அவரிடம் ஆலோசனை கேட்பேன். 1ம் மனுதாரருக்கும்/ எதிர்மனுதாரருக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சனைகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்,

எதிர்மனுதாரர் கூறி தான் எனக்கு தெரியும். நான் முதல் விசாரணையில் கூறிய தகவல்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–**

இல்லை.